2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

**O.S.No. 66/2023**

02.08.2025 பி.வா.சா.1 திரு. பிலவேந்திர ராஜ்

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

1. வாதிகள் இந்த வழக்கை எனது அப்பா அந்தோணியின் வாரிசு என விளம்புகை வழக்கு தாக்கல் செய்துள்ளார் .எனது அப்பாவின் முதல் மனைவி பெயர் மரிய சொர்ணம். மரிய சொர்ணத்தின் தங்கைதான் கனகம்மாள் என்றால் சரிதான். எனது அப்பா கனகம்மாளை தான் இரண்டாவதாக திருமணம் செய்தார் என்றால் சரிதான். நான் கனகம்மாளுக்கு பிறந்தவன் என்றால் சரிதான். கனகம்மாளுக்கு பிறந்தவர்கள் இரண்டு ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் உள்ளனர்.நானும் எனது சகோதரர் ரமேஷும் கனகம்மாளின் ஆண் வாரிசுகள். மேற்படி கனகம்மாளின் பெண் வாரிசுகள் மரியம்மாள், மரிய புஷ்பம் மற்றும் ஏஞ்சல் மேரி. எனது சகோதரி மரியம்மாள் தற்போது உயிருடன் இல்லை. மரியம்மாளின் கணவர் பெயர் அந்தோணி சவரி முத்து. சகோதரி மரியம்மாளின் பிள்ளைகள் தான் ஆனந்தராஜ், அனுசியா மற்றும் தமிழ்செல்வன். எனது அக்காவின் கணவன் அந்தோணி முத்து தற்போது உயிருடன் இல்லை என்றால் சரியல்ல அவர் உயிருடன் இருக்கிறார். எனது அப்பாவின் முதல் மனைவியின் மகன்தான் மாதா என்ற ராஜ்மோகன் என்றால் சரிதான்.

2. மாதா என்ற ராஜ்மோகனின் மனைவி தான் இந்த வழக்கின் வாதி என்றால் சரியல்ல அவரது மனைவி பெயர் பிச்சம்மாள். மாதா என்ற ராஜ்மோகனின் மனைவிதான் பிச்சம்மாள் என்பதை காண்பிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னிடம் ஆவணம் உள்ளது அதை நான் தாக்கல் செய்யலாம். வாதி ராஜ்மோகனின் மனைவி என்று நீதிமன்றத்தில் நிரூபித்து தான் வாரிசு சான்று பெற்றுள்ளார் என்றால் சரி அல்ல. எனது எதிர் வழக்குரையில் மாதா என்ற ராஜ்மோகன் மனைவி பிச்சம்மா என்று நான்

கூறியுள்ளேன் என்றால் கூறியுள்ளேன். இந்த வழக்கில் சம்மன் வந்த பின்பு தான் வாதி வாரிசு உரிமை கோரி அ.வ.எண்.446/2019 என்ற வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும் இந்த வழக்கில் சம்மன் மூலம் அசல் வழக்கு எண் 446/2019 எனக்கு தெரிய வந்த பின்பு நான் அந்த தீர்ப்பை ரத்து செய்ய வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. மாதா என்ற ராஜ்மோகன் என்பவருக்கு பிச்சம்மாள் என்ற மனைவி இருப்பதாக கூறுவது கற்பனை என்றால் சரியல்ல. மாதா என்ற ராஜ்மோகன் என்பவருக்கு யார் வாரிசுகள் என்ற கேள்வி எழுப்பப்பட்டு அசல் வழக்கு எண் 446/2019 தீர்மானிக்கப்பட்டுள்ளதால் இந்த வழக்கில் ராஜ்மோகனின் வாரிசு யார் என்று தீர்மானிக்க முடியாது என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளது போல் 1ம், 2ம் வாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்பதை தீர்மானிக்க வேண்டிய வழக்கு இது அல்ல என்றால் சரியல்ல.இந்த வழக்கின் வாதிகள் இந்த வழக்கின் 1 முதல் 7 வரை பிரதிவாதிகளும் காலம் சென்ற அந்தோணியின் வாரிசுகள் தான் என்றும் நான் வழக்குக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.